21.10.2024 .வா.சா.2 இருளாச்சி O.S 390 /2018

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னை சாட்சியம் அளிக்க யார் கூப்பிட்டார்கள் என்றால் ராமலட்சுமி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ராமலெட்சுமி தாக்கல் செய்துள்ள வழக்கின் அனைத்து ஆவண விபரமும் தெரியும் என்றால் தெரியும். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் வாதி முத்துசாமியும், சங்கரையா நாயுடு மற்றும் நான் ஆகியோர்கள் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் அப்பா சுப்பையா நாயுடுவின் தகப்பனார் பெயர் முத்துசாமி. எங்கள் குடும்பத்திற்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட இடங்கள் இருந்ததா என்றால் இருந்தது. என் குடும்பத்திற்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட இடத்தில் எனக்கும் பங்கு உண்டு என்றால் உண்டு. தாவா சொத்து உள்ள தெருவில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால் தாவா சொத்தில் இருந்து 5 வீடு தள்ளியுள்ளது. நான் தற்போது குடியிருந்து வரும் வீடு பூர்வீகமாய் பாத்தியப்பட்டதா என்றால் என்தகப்பனார் வாங்கி பாக பிரித்தது. அவ்வாறு பாகம் பிரித்த போது முத்துசாமிக்கும், எனக்கும் பாகம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது நான் வசித்து வரும் வீட்டின் சர்வே தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என் தம்பி முத்துசாமி எந்த சர்வே நம்பருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.511, 512 ஆகும். சர்வே எண் 511, 512க்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 3செண்ட் இடத்திற்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்திற்கு நான்கு பக்கம் உள்ள சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய மற்றொரு சகோதரர் சங்கரையாவும், நானும், 1ம் வாதியும் பேசிக்கொள்வோமா என்றால் பேசிக்கொள்வோம். வாதிகளுக்கு தாவா சொத்து ஆதியில் எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பூர்வீக சொத்தில் இருந்து பாகபிரிவினை மூலம் கிடைக்க பெற்ற சொத்தாகும். என் தகப்பனார் வாதிக்கு உயில் எழுதிக்கொடுத்ததாக கூறும் நான் எனக்கு ஏதாவது உயில் மூலம் சொத்து

எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக்கொடுத்தார். எந்த சர்வே நம்பரில் உள்ள சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. என் அப்பா வாதிக்கு எந்த சர்வே நம்பர் சொத்தை உயில் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிகள் குடும்பத்தை பற்றி எனக்கு சிறுவயது முதல் தெரியும் என்றால் சரிதான். நான் வசித்து வரும் தெருவில் பிரதிவாதிகளுக்கும் பூர்வீக இடங்கள் உள்ளது என்றால் சரிதான். வாதிகள், சங்கரையா ஆகியோர்கள் தற்போது எந்த சர்வே நம்பரில் வசித்து வருகிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் சொல்லி தான். வாசித்து பார்த்தேனா என்றால் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் வேறு விபரங்கள் பற்றி தெரியாது. 2ம் பிரதிவாதி ராமதாஸ் தற்போது எந்த சர்வே நம்பரில் வசித்து வருகிறார் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 2ம்பிரதிவாதி ராமதாஸிடம் இருந்து சர்வே எண் 571/11 நம்பரில் ஒரு செண்டு இடத்தை வாதிகள் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளிடம் இருந்து சங்கரையாக 3/4 செண்ட் கிரையம் வாங்கியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்துக்களை யாரும் கிரையம் பெறவில்லை. எனக்கு இந்த வழக்கு பற்றி விபரம் தெரியாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிறந்த வீட்டின் கதவு எண், சர்வே நம்பர் என்னால் சொல்லமுடியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. தாவா சொத்துக்கு வடபுறம் இடம் உள்ளது. தெற்கில் - சங்கரையா நாயுடு இடம் உள்ளது. தாவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் ஒரு முடுக்கு அடுத்து ஒரு வீடு உள்ளது. அந்த வீடு ராமதாஸ் வீடு உள்ளது. அதற்கு மேற்குபுறம் என் அண்ணன் ராமசாமி வீடு உள்ளது. தாவா இடத்திற்குரிய தற்போதைய பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. என் சகோதரர் சங்கரையா நல்ல ஆரோக்கியமாக உள்ளார் என்றால் சரியல்ல. வெளியில் செல்வது கிடையாது. இருளாச்சி என்ற பெயரை எங்கள் குடும்பத்தில் அதிக நபர்களுக்கு வைப்பார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வாதிகளை ஏமாற்றி சொத்துக்களை விற்றுள்ளார் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் வாதிகளை ஏமாற்றி அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்றதாக சாட்சியம் அளிப்பது எந்தவித ஆவணமும் இல்லாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையில் காவல்துறையில் நடைபெற்ற விசாரணை பற்றி எனக்கு தெரியாது என்றால் புகார் கொடுத்தது தெரியும். விசாரணை பற்றி தெரியாது. என் அப்பாவுடன் உடன்பிறந்தவருக்கு எத்தனை நபர்கள் என்றால் யாரும் கிடையாது. என் தாத்தா முத்துசாமி நாயுடுவின் அப்பா தான் பெருமாள் நாயுடு என்றால் சரிதான். அந்த பெருமாள் நாயுடுவின் மனைவி பெயர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. பெருமாள் நாயுடுவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் தெரியாது. வழக்கு சொத்து மொத்தம் 3 செண்டு விஸ்தீரணம் கொண்டது என்றாலும் அதில் 1-3/4 செண்டை வாதிகளுக்கும், என் சகோதரர் சங்கரையாவிற்கும் கிரையம் கொடுத்தது போக மீதி 1-1/4 செண்டை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்ய சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.